305

சுபமஸ்து.

தமிழகம்.

வால்யூம் 2. | 1907ஞு செப்டம்பர்மீ. | நம்பர் 11.

தமிழ்மொழியின் வளர்ச்சி.

நமது பாஷையாகிய 'தமிழ்' இறந்து வருகிறது என்றும் சீக்கிரத்தில் இறந்துவிடும் என்றும் சிலர் கூறுகின்றனர் ஆயினும் 'அது இறக்கவில்லை, உயிரோடு இருக்கின்றது, இப்போதும் வளர்ந்துகொண்டே வருகிறது' என்று ருசுப்பிப்பது மிகவும் எளிதென்று என் மனதிற்குப்பட்டது. அதனை எடுத்துக் காட்டத் துணிந்தனன். இப்போது இன்று தினத்தில் தமிழ் பேசும் மக்களின் தொகை 1,45,00,000 (145 லெக்ஷம்) என்றும் நமது பாஷையிலுள்ள சொற்களின் தொகை 58,500 என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. இத்தனை வார்த்தைகளோடு கூடிய ஓர் பாஷையைப் பேசுபவர்கள் 145 லெக்ஷம் ஜனங்களென்றால், இந்த பாஷை இறந்துபடும் என்று எப்படிச் சொல்லுகிறது? ஒரு பாஷையைப் பேசுபவன் ஒருவன் உயிரோடு

இருந்தாலும் அந்த பாஷை இறந்துவிட்டது என்று சொல்லுதல் முடியாது. இந்த 145 லெக்ஷம் ஜனங்களில் $14\frac{1}{2}$ லெக்ஷம் ஜனங்கள் தமிழை எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் என்று அதிகாரிகள் கணக்கிட்டிருக்கிறார்கள். ஆதலின் இந்த பாஷை இறந்துவிடும் என்று ஒருவர் தமது கண்ணைமூடிக்கொண்டு சொல்லுவாரேயானால், அவ்வார்த்தை நம்பக் கூடியதல்ல.

மேலும், சுமார் 18-ம் நூற்றாண்டு முதல் இன்றுகாறும் தமிழர் ஐரோப்பிய ஜாதியார்களில மிகவும் நாகரீகமும் கல்வியும் பொருந்தப்பெற்ற ஆங்கிலேரோடு கூடிக்கலந்து உறவாடி வருகிறார்கள். விடாமுயற்சியும் ஊக்கமும் பொருள் சேர்க்குந்துறைகளில மிகுந்த தேர்ச்சியும் வர்த்தகமும் தூரதேசப் பிரயாணஞ் செய்தலும தமிழர்களின் சிறந்த குணங்களென்று யாவருக்கும் நன்றாகத் தெரியும். இதுவரையும் இந்த விஷயத்தை அறிந்து கொள்ளாதவர் யாவராகிலும் இங்கே இருப்பார்களாயின், அவர்கள் உடனே சங்க நூல்களில் ஏதொன்றையாகிலும், அது முடியாமற் போனால், காலஞ்சென்ற வி. கனகசபைப்பிள்ளையவர்களின் '1800 வருஷங்களுக்கு முந்திய தமிழர்' என்னும் நூலையாகிலும் படித்துத் தெளிந்துகொள்ளும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். இப்படிச் சிறந்த குணங்களோடு கூடிய தமிழர்கள் இரண்டு நூற்றாண்டுகளாக ஆங்கிலரோடு கலந்து பழகிவருகிறார்கள் இப்பழக்கம் வீண்போகுமா? சிறந்த கவியாகிய கம்பர் கூறியமாதிரி,

"தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினுமவர்தம்
மருண்ட தன்மையை மாற்றுவரெனு மிதுவழக்கே
உருண்டவாய் தொறும் பொன்னுருளுரைத் துரைத்தோடி
இருண்ட கல்லையுந் தன்னிற மாக்கிய விரதம்."

அதாவது, தனது புத்திரனாகிய ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் விவாகம் மிதிலையின்கண் நடக்கிறது என்பதைக்கேட்ட தசரதர் தனது பரிவாரங்களுடன் எழுந்து அயோத்தியா நகரம் விட்டுப் புறப்பட்டு மிதிலைநோக்கி வருகிறார். அப்போது அவர் ஏறிவரும் இரதம் பொன்னாலாக்கப்பட்ட உருளைகளுடன் சந்திரசைலம் என்னும் மலையின் கரடு முரடான மலைப்பிரதேசங்களில ஓடிவரு

கின்றதாம். அப்போது தேர் உருளைபடியும் சுவடெல்லாம் கற்பூரறை நிறம் மாறிப்பொன்னுருப்பெறுகின்றதாம். அதற்குக் கம்பர் உபமேயமாகக் கல்வி மிகுந்த பெரியவர்கள் சிறியவர்களைச் சேர்ந்தால் அந்தச் சிறியவர்களின் அஞ்ஞானமயக்கத்தை மாற்றித் தமது தெளிந்த ஞானத்தை அக்கசடர்களுக்குப் புகட்டுவார்கள் என்று சொல்லியிருக்கிறார்! அதனைப்போல, நாகரீக மேன்மையும் விவகாரச் சிறப்பும், கல்வி முதிர்ச்சியும் கைவந்தவர்களான ஆங்கிலருடன் இரண்டு நூற்றாண்டுகளாகப் பழகிவிட்டு இப்போது தேர்ச்சியடையவில்லை இவர்கள் என்றால், அது எனக்கு நம்பத்தக்க விஷயமாகத் தோற்றவில்லை.

மேலும் உற்றுநோக்கிப் பார்க்குமளவில் தமிழர்கள் இப்போது தம்முடைய ஞாபகம் தமக்கு வந்து தமது இழிவான நிலைமையை எப்படியாகிலும் செப்பனிட்டுக்கொண்டு முன்னுக்கு வரவேண்டும் என்று தமது உள்ளுற நினைத்துச் சிலகாரியங்கள் செய்து வருகின்றார்கள் என்று என் புல்லறிவிற்குத் தோற்றுகிறது. இதற்குக் காரணம் பின் நான் கூறும் வார்த்தைகளால் அறிந்துகொள்ளுவீர்கள். என்னவென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் வகுத்துக்காட்ட முடியாததான ஒரு மனக்கிளர்ச்சி நமது ஜனங்களுக்கு இப்போது உண்டாய்க்கொண்டு வருகிறது. புதிது புதிதான அபிப்பிராயங்களும், விரிந்து பரவுகின்ற மனோபாவங்களும், ஒன்றை மனதிலிடத்தில் வைத்து ஊன்றிப்பார்த்து அதை அடைந்து பலனை அனுபவிக்கவேண்டுமென்ற ஆதுரமும் விடா முயற்சியும், சாஸ்திரப் பொருள்களை ஆராய்ந்துகொள்ளுதலும், பொருளீட்டுதற்கு வழிகளான துறைகளைத்தேடியும் கைத்தொழில் விவசாயம் முதலான தொழில்களைச் சிறிது கற்றுப்பயனடைவோம் என்னும் ஊக்கமும் நமது தமிழகத்தாருக்கு உண்டாய்க்கொண்டு வருகின்றன. இப்படிக்கெல்லாம் வளர விரும்புபவர்களாகிய தமிழர்கள் தமது நடையுடை பாவனைகளை விடுத்து அன்னியர் நடையுடை பாவனைகளைக் கைப்பற்றித் தமது அருஞ்சமய நெறியை மறந்து புறநெறிகளில் மனம் வைத்து விட்டார்களோ என்றால், இல்லவே இல்லை! அப்படித் தம்முடைய சிறப்பாகிய இயல்பை மறந்து விட்டார்களென்றால், அவர் பூரணஷ்

அன்றே இறந்துவிட்டது என்று சொல்லி விடுவேன். ஆயினும் நல்லவேளையாக அவர்கள் தம்முடைய நடையுடைபாவனை முதலியவைகளின் சிறப்பியல்பை இழந்து விட்டார்களில்லை. ஆதலின் அவர் பாஷையும் அழியாச்சிறப்போடு கூடினதென்று எனக்குத் தோற்றுகின்றது.

மேலும் சில தமிழ்வாணர்கள் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களோடும் சுமார் 1879-ம் வருஷத்தில் இறந்த யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்களோடும் தமிழ் மாண்டது என்று சொல்லுவார்கள். ஒருவகையான இயற்றமிழ் மாத்திரம் குறைந்து விட்டது என்று சொல்ல நான் தயாராயிருக்கிறேனே ஒழிய தமிழின் வளர்ச்சி வேறு மார்க்கங்களில் குன்றிவிட்டது என்று சொல்ல நான் சம்மதப்படவில்லை. ஆங்கில நாகரிகத்தோடு உறழ்தலால தமிழின் விருத்தி நமது கண்ணிற்கும் புலப்படாமல் நடந்துகொண்டே வருகிறது. 'வீரமாமுனிவர்' என்று மறுபெயர் பூண்டு நம்முடைய நாட்டிலே வசித்த கான்ஸ்டாண்டியஸ் பெஸ்கியின் காலமுதல் தமிழை உண்மையாய்ப் பரிபாலிப்பவர்கள் பழந்தமிழ் கற்கும் புலவர்கள் அல்லரென்றும் ஐரோப்பியர்களும் கால்டுவெல் முதலான பாதிரிமார்களும் ஆங்கிலங்கற்ற தமிழர்களுமே அவ்வேலையைத் தம்மேற் கொள்ளும்படி நேரிட்டதென்பதும் யாவருக்கும் நன்றாகத் தெரிந்த விஷயம். உதாரணமாக நமக்கு பெஸ்கி செய்த பேருதவியை எடுத்துச்சொல்லுகிறேன். இவர் இத்தாலி தேசத்து மாண்டுவா என்ற நகரிற்கு அருகிலுள்ள 'காஸ்டிக்லியான் என்ற ஊரிற் பிறந்த புண்ணியவான். கி. பி. 1680-ம் ஆண்டிற் பிறந்து நம்முடைய நாட்டிற் குடியேறி நமது தமிழைப் போற்றிவந்து திருநெல்வேலி ஜில்லா மணப்பார் என்ற ஊரில் 1746-ம் ஆண்டில் இறந்தார். இவர் ஒரு பாதிரியார். திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள வடக்கன்குளம், காமநாயக்கன்பட்டி முதலான இடங்களில் இருந்து சைவகுரவர்களைப்போல வேடம் தரித்து, முண்டாசு தலையிற்கட்டி, காலில் பாதகுறடு போட்டு, கையிரடியூன்றி, பல்லக்கேறிச்சென்று, வியாக்கிரத்தின் தோல் மேலாக வீற்றிருந்து தமிழகத்தாருடனே உறவாடினார். 1716-

ஆம் ஆண்டில் மதுரைக்கும், 1720-ஆம் ஆண்டில் திருச்சி
ராப்பள்ளிக்கும் வந்தார். நமது தமிழகத்துக்கு வந்தது முதல்
தமிழ்க் கல்வியை ஆராயத்தொடங்கி அதினிடத்தில் தமிழ் வித்
துவான்களைக் காட்டிலும் ஊற்றம் பெற்று 1724-ஆம் ஆண்டில்
தமிழ்ப்புலவர்களெல்லாம் கொண்டாடுகின்ற ஜீவகசிந்தாமணிக்
கிணையோ என்று யாவரும் வியக்கும்படி 'தேம்பாவணி' என்ற
ஒரு நூலை இயற்றினார். இத்தேம்பாவணியும் அதற்கு அவரே
கண்ட உரையும் செந்தமிழ் கொடுந் தமிழ் இலக்கணங்களை
இவர் லட்டீன் பாஷையில் எழுதிய நூலும் தமிழிலக்கணத்தின்
ஐவகை உறுப்புக்களையும் செம்மையாய் விளக்கிக்காட்டும் அவ
ரது தொன்னூல் விளக்கமும் 'அவிவேக பூர்ண குருகதை' என்
று இவர் இயற்றிய தமிழ் நடையும் இவரது தமிழ்க் கல்வித்தி
றனை நன்றாக விளக்குமாயினும், தமிழிற்கு எளிய அகராதி இல்
லாதிருந்த குறையை இவரே நீக்கினார். இவரது சதுரகரா
தியே தமிழிலுள்ள எல்லா அகராதிகளிலும் முதன்மையும் அதிக
மாக யாவரும் உபயோகப்படுத்தும் தன்மையும் உள்ளதாய் இன்
றைக்குமிருக்கிறது.

அவரது காலம் 18-ம் நூற்றாண்டின் முற்பகுதி என்று
அறிக. அது முதல் தமிழிற் குழைத்த பாதிரிமார்கள் அநே
கர் உண்டு. அவர்களுடைய சரித்திரங்களையும் அவர்கள்
செய்த நன்றியையும் எடுத்துக் கூறுதல் மற்றோர் சமயத்தில்
என்னலாகும். இப்போது காலமும் முற்றறிவும் எனக்குக்
கிடையாது. இவ்விதம் ஐரோப்பியப் பாதிரிமார்களும் ஆங்கில
வித்வான்களும் நமது கனந்தங்கிய சர்வகலாசாலைச் சங்கத்தா
ரும் நமது தமிழிற்கு 18-ம் நூற்றாண்டின் இறுதிகாலம் முதல்
உழைத்துவந்து இன்னமும் உழைத்து வருகின்றார்கள். இப்
படி இவர்கள் நவீன வழிகளில் உழைத்து வரச் சில செந்தமிழ்
வாணர்களும் கவிவாணர்களும் பழநிலைமாறிப் புது நிலை வந்ததை
அறியாதவர்களாய்ப் பலகாலம் அல்லற்பட்டுத் தாம் பிடித்த
முயலுக்கு மூன்றே காலென்று தாம் கேட்டிருந்த வழிமுறைப்
படி பழங்கந்தாயம் படித்து இப்போது நமக்கு மிகவும் உபயோக
மாகின்ற சங்க நூல்களையும் மத நூல்களையும் பொது நூல்களை

யும் குரங்கு விட்டுத்த கொம்பைப்போலப் போற்றிவந்தனர். இந்தப் பெரிய காரியத்தையாவது செய்துவைத்த நமது தமிழ்ப்புலவர்களுக்கு நாம் மிகவும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இவ்விதம் ஒரு நூற்றாண்டளவும் தமிழ்நூல்கள் புலவர்களாற் போற்றப்பட்டும் ஆங்கிலம் கற்றவர்களால் மௌனமாய்ப் பரிபாலிக்கப்பட்டும் புது வழிகள் கற்பிக்கப்பட்டும் தமிழ்மொழி வளர்ந்து வந்தது. ஒரு ஆற்றங்கரை யூற்றில் பல கண்கள் வழியாய்ச் சுரக்கின்ற நீர் ஒன்று சேர்ந்து ஒரு நீர் நிலயமாதல் போல யாவருக்கும் தெளிவாய்ப் புலப்படாத இவ்வித மூலங்களின் வழியாய்த் தமிழ்மொழி சுரந்து சென்ற நூற்றாண்டின் பிற்பாதி முதல், அதாவது 1850 ஆம் வருஷம் முதல், வளர்ச்சி எல்லாருடைய கண்களுக்குந் தோற்றும்படி ஆய்விட்டது. கஜகர்ப்பமென்று கேட்டிருக்கின்றோம்! அது தமிழின் வளர்ச்சிக்கே அமையும்! ஒரு நூற்றாண்டளவுகாலம் கர்ப்பமிருந்த தமிழ் என்னும் அணங்கு ஈன்ற குழவி உடனே வளருமா? ஆகலின் அதன் வளர்ச்சியும் மெதுவாகவே நடந்து வருகிறது.

நான் இதுவரையும் கூறிவந்த வளர்ச்சி நானாக நினைத்துக்கொண்ட வளர்ச்சியே ஒழிய உண்மையாக நடந்தேறிய வளர்ச்சியல்லவென்று நினைத்துச் சிரிக்காதீர்கள். சென்ற ஐம்பது வருஷகாலமாகத் தமிழ் வளர்ந்திருக்கும் வளர்ச்சி அதனைச் சிறிது காண முயல்வோர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும். இந்த ஐம்பது வருஷகாலமாகத் தமிழிலிருந்துவரும் நூல்களை நோக்கினால், அவைகள் முக்கியமாய் மொழி பெயர்ப்புக்களாகிய வசனநடையென்றும், பத்திரிகைகளின் வியாசங்களென்றும், ஏட்டுப் பிரதிகளிலிருந்து புதுப்பித்துப் பதிக்கப்பட்டு வரும் பழய சங்க நூல்களென்றும், நவீன நாடகங்களென்றும் தோற்றுகின்றன. இந்நூல்களை ஏற்படுத்தினவரும் இனியும் ஏற்படுத்த யத்தனிக்கின்றவரும் முக்கியமாய் ஆங்கிலங் கற்ற அறிவாளர் என்று தோற்றுகிறது. கொஞ்சகாலங்களுக்கு முன் மாயவரத்தில்

முனிசிபுவேலை பார்த்துவந்த வேதநாயகம்பிள்ளை அவர்கள்,
சென்னை பிரிஸிடென்ஸி காலேஜில் கணிதசாஸ்திர பண்டித
ராக இருந்த ராவ் பகதூர் அரங்கநாத முதலியார் அவர்கள்,
மேற்படி காலேஜில் சமஸ்கிரத பண்டிதரும் மொழியியல் ஒப்பு
நோக்கிப்பார்க்கும் நிபுணருமான சேஷகிரி சாஸ்திரியார் அவர்
கள், புதுக்கோட்டை ஜெட்ஜியாக விருந்த ராவ் பகதூர் தாமோ
தரம்பிள்ளை அவர்கள், திருவனந்தபுரம் காலேஜில் தத்துவசாஸ்
திர பண்டிதராக இருந்த சுந்தரம் பிள்ளை அவர்கள் முதலியோர்
களெல்லாம் ஆங்கிலம் வல்ல தமிழபிமானிகள். இவர்கள் செய்த
நூல்களும் தமிழிற் குழைத்த உழைப்புகளும் மிகவும் மெச்சக்
கூடியவைகளாய் இருக்கின்றன. வேதநாயகம்பிள்ளை அவர்க
ளின் பிரதாப முதலியார் சரித்திரம் வாசிக்க மிகவும் விநய
முள்ள ஓர் கதை. அவர்களுடைய கீர்த்தனைகளும் மிகவும்
அழகுள்ளவைகளும் நீதி புகட்டுவனவைகளுமாக இருக்கின்றன.
அரங்கநாத முதலியார் அவர்கள் செய்த கச்சிக்கலம்பகம் புல
வர்கள் மெச்சிக் கொள்ளக்கூடியதாக இருந்தபோதிலும், நவீன
வழியை ஒட்டி வந்ததல்ல தாமோதரம்பிள்ளை அவர்கள் தமிழிற்
குழைத்த பாடு மிகவும் கொண்டாடத்தக்கது (B. A. B. L.)
பீ. ஏ. பி. எல், பட்டங்களைப் பெற்றிருந்தாலும் இவருக்கிருந்த
தமிழபிமானமும் தமிழின் தேர்ச்சியும் இவ்வளவவ்வளவல்ல. வீர
சோழியம், இறையனார் அகப்பொருள், தொல்காப்பியம், இலக்கண
விளக்கம், சூளாமணி, முதலிய முதுநூல்கள் இவரால் பதிப்பிக்
கப்பட்டன. தமிழ் நுணுக்கம் பெற்ற இந்த யாழ்ப்பாண நாட்
டுத் தமிழர் தமிழறிவுடையாரை யெல்லாம் போற்றிவந்தார்.
புரொபெஸ்ஸர் சுந்தரம் பிள்ளை அவர்கள் மனோன்மணிய
நாடகத்தைப் படித்தறியாத் தமிழ் மாணவர்கள் இலர். நவீன
நாடகங்களுக்கு எல்லாம் வழிகாட்டிய முதனூல் இதுவே.
சேஷகிரி சாஸ்திரியார் அவர்களின் மொழிஇயல் நுணுக்கம்
சில விஷயங்களில் புலவர் கோட்பாட்டிற்கு முரணுமானாலும்,
தமிழ்மொழியின் சுரூபத்தைத் தெரிந்துகொள்ள அது உபயோ
கமாயிற்று. இவ்விதம் நவீன நூல்களும் நவீன நூலாசிரியர்க
ளும் செழித்த இந்தக்காலம் தமிழ் வளர்ந்த காலமென்றே
சொல்லவேண்டி இருக்கின்றது.

இக்காலத்திய மற்ற நூல்களையும் நூலாசிரியர்களையும் சொல்லுகிறேன். ஆனால், இது சொல்லும் விஷயத்தில் நான் ஒரு பிழை செய்தாலும் செய்யலாம். எப்படியென்றால், இந்தக் காலம் மிகவும் கிட்டிய காலமானதினாலும் இக்காலத்திலேயே நாமும் வசிக்கின்றபடியினாலும் பெரிய தமிழ் வாணர்களையும் சிறிய தமிழ் வாணர்களையும் அவரவர் திறத்திற்கும் தரத்திற்கும் ஏற்பப்பாகுபாடு செய்தல் கடினமாகின்றது. ஒரு நூற்றாண்டு இரண்டு நூற்றாண்டிற்கு முந்திய புலவர்கள் விஷயத்தில் இந்த சங்கடம் ஏற்படுகின்றதில்லை. அவரவர் திறத்திற்கேற்ப அவரவரை முதற்றரத்தினரென்றும் இரண்டாந்தரத்தினரென்றும் பாகுபாடு செய்தல் எளிதாக இருக்கின்றது. அதற்குக் காரணம் நமக்கு உதவியாகின்ற காலமென்னும் தூரதிருஷ்டிக்கண்ணாடியே! ஆதலால் தற்காலத்துப் புலவர்களையும் அவர்களது நூல்களையும் பற்றிப்பேசுகிற ஒருவன் ஒரு சமயம் பிழைசெய்தாலும் செய்யலாம். இரண்டாந்தரத்துப் புலவனொருவனை முதற்றரத்தினனென்று கூறிவிடுதலும் அமைந்துபோம். ஆயினும் அத்தகைய பிழைகள் காலவளவில் மாறிவிடுமென்று நினைத்துத் தைரியமாய் என் மனதிற்குத் தோற்றியபடி இக்காலத்திய புலவர்களையும் அவர்களது நூல்களையும் விவரித்துச் சொல்லுகிறேன். இப்புலவருட் சிலர் ஏற்கனவே காலஞ்சென்றுவிட்டார்கள். சிலர் இன்னமும் நமது மத்தியிலேயே சுக ஜீவிகளாக இருக்கின்றார்கள்.

நமது யுனிவர்ஸிட்டியில் பி. ஏ. பட்டம் தரித்தவர்களுள் இராஜமையர் என்று ஒருவர் இருந்தார். தற்காலத்து நாகரிகம் பயின்ற யாவருக்குமே அவர் பெயர் தெரிந்திருக்குமென்று நம்புகிறேன். அவரது 'விழித்தெழுந்த இந்தியா' என்ற ஓர் ஆங்கிலப் பத்திரிகையைப் பலமுறை நான் படித்தபொழுதெல்லாம் கண்ணீர் தாரையாகக் கன்னத்திலே புரள மனமுருகி உட்கார்ந்திருப்பேன். பக்திமார்க்கத்தையும் தத்துவ ஞானத்தையும் தந்து சங்கீர்த்தனை பாடிய ஓர் குயிலென்றே அவரை நான் மதித்திருக்கின்றேன். அவருடைய "கமலாம்பாள்" என்னும் ஓர் தமிழ்க்கதையைப் படியாதவர் மிகவும் சிலரென்றே நம்புகிறேன். தெளி

வான வர்ணனையும் அழகான குணவிபாகங்களும் அந்நூலினி
டையே மல்கியுள்ளன. யாழ்ப்பாணத்துச் சரவணப்பிள்ளை
அவர்கள் மற்றொருவர். அவர் ஒரு பி. ஏ. பட்டம் தரித்தவர்.
பிரஸிடென்ஸி காலேஜில் புத்தகசாலைப் பரிபாலகராகக் கொஞ்
சகாலம் இருந்தார். இவருடைய 'மோகனாங்கி' என்னும் நவீ
னகதை மிகவும் அழகுள்ளது. கிங்ஸ்லி என்னும் ஆங்கிலவா
ணர் எழுதிய 'ஹைப்பேஷியா' என்னும் நாயகியின் கதையைப்
படித்தவருக்கு இந்த மோஹனாங்கியின் அருமை நன்றாய் விள
ங்கும். மற்றொருவர் பிரணதார்த்திஹரசிவன் என்பவர். அவர்
என்னருமைத் தோழர்களுள் ஒருவர். சென்னை தொண்டை
மண்டலம் ஹைஸ்கூலில் கொஞ்சகாலம் ஹெட்மாஸ்டராக
இருந்து இளமையிலேயே காலவியோகமாயினர். அவர் இய
ற்றிய நூல்களில் தமயந்தி என்னும் நாடகமும் வியாசமஞ்சரி
என்னும் சில வியாசத்தொகுதிகளும் ஆங்கில கலாசாலை மாண
க்கர்களால் அதிகமாக உபயோகப்படுத்தப் படுகின்றன. ஸரஸ
லோசன செட்டியார் என்றொருவர் சரஸாங்கி என்ற ஓர் நாடக
த்தை எழுதினர். இந்நவீனப் புலவர்களுளெல்லாம் சிகாம
ணிபோல் விளங்கியவர் சென்னை கிருஸ்தியன் காலேஜில் முதன்
மையான தமிழ்ப்பண்டிதராக விளங்கிய சூரியநாராயண சாஸ்தி
ரியார் அவர்கள். தென்னிந்தியா போதகாசிரியர்களுக் கெல்
லாம் சிரேஷ்டரான டாக்டர் மில்லர் என்னும் ஸ்காக்ஷிய
வித்துவானின் மாணாக்கர். சென்னை யுனிவர்ஸிடியில் தேறிய
பி. ஏ. க்களுள் ஒருவர். நான்கு வருஷங்களுக்கு முன்னர் தன
து இளம் பிராயத்திலேயே இறந்துவிட்டார். இவர் ஒரு கவி
வாணர், நாடகாசிரியர். கொஞ்சகாலம் பத்திராசிரியராகவுமி
ருந்தார். ஞானபோதினி என்ற பத்திரிகையின் ஆசிரியருக்கு
நான்கு வருஷம் உதவி புரிந்துவந்தார். ரூபாவதி, கலாவதி,
மானவிஜயம், என்பன இவர் இயற்றிய நாடகங்கள். நாடக
விலக்கணத்தைத் தொகுத்து 'நாடக வியல்' என்றோர் நூலெ
ழுதி இருக்கிறார். அவ்வவ்வமயங்களில் ஒருக்கால் கடற்கரை
யோரத்தில் திரிந்தவேளையிலும், விளக்குக்கூண்டைத்தரிசித்த
போதும், சிறுபாடல்களும் பெரும்பாடல்களுமாய் நவ நவமான

கருத்துக்களை யமைத்து இவர் பாடிய 'புலவர் விருந்து' என்னும் நூல் உண்மையில் புலவர்களுக்கு விருந்தேயாகும். இவர் செய்த 'தனிப்பாசுரத்தொகை' என்னும் நூலில் பலவேறு சிறிய பாடல்கள் உண்டு. ஆங்கிலத்தில் இத்தகைய பாடல்களுக்கு 'ஸானெட்ஸ்' என்று பெயர். இந்நூலிற்கு ரெவரெண்டு டாக்டர் போப் என்னும் ஆங்கில நாட்டுத் தமிழ்ப்புலவர் ஓர் முகவுரை எழுதிக்கொடுத்திருக்கிறார். இவரியற்றிய "மதிவாணன்" என்னும் வசனநூல் சிறந்த தமிழ் நடையிலமைந்தது. "தமிழ் மொழியின் வரலாறு' என்று பெயரிட்டு இவர்கடைசியில் எழுதிய வசனநூல் மிகவும் கவனித்துப்படிக்கத்தக்கது. மற்றுவேறு பெரும் புலவர்களுள் திருமயிலை சண்முகம் பிள்ளை அவர்களும், உத்தமதானபுரம் மஹாமஹோபாத்தியாயர் வே. சுவாமிநாதஐயர் அவர்களும், பூவை கல்யாணசுந்தர முதலியார் அவர்களும் இப்போது பேலியல் காலேஜில் இருந்து வரும் ரெவரெண்டு டாக்டர் ஜீ. யூ. போப்பையர் அவர்களும், மிகவும் கியாதி பெற்றவர்களே. இவர்கள் செய்து வரும் பேருதவிகள் யாவருக்கும் தெரிந்தவைகள்.

இவ்விதம் நமது தமிழ்மொழி தற்காலத்தில் செழித்துவளர்ந்து வருகிறது. ஏதோ ஆச்சரியகரமாக இருபதாம் நூற்றூண்டின் துவக்கத்தில் மதுரையில் ஒரு தமிழ்ச்சங்கம் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு உதவியாகப் பல விடங்களில் சிறிய சிறிய வேறு சங்கங்களும் ஏற்பட்டிருக்கின்றன. எனக்குத் தெரிந்தமட்டில் இப்போது தமிழகத்தில் பத்து சங்கங்கள் இருக்கின்றன. இவைகளெல்லாம் தாங்கள் ஏற்படுத்திக்கொண்டிருக்கிற நிபந்தனைப்படியும் நோக்கங்களையோசித்தும் நடந்துகொண்டு வருமேயாயின், கால வளவில் அவைகள் பயனைத்தருமென்பதிற் றடையில்லை.

தற்காலத்திய தமிழின் வளர்ச்சியை நோக்கும் ஒருவன் இப்போது நாற்றிசைகளிலும் பரவித்திரியும் பத்திரிகைகளையும் வர்த்தனிகளையும் பற்றி ஒருவார்த்தை சொல்வது அவசியம். சுதேசமித்திரன், இந்துநேசன், சுதேசி, இந்தியா, விகடதூதன்,

முதலிய பத்திரிகைகளும், செந்தமிழ், விவேகபாநு, ஞானபோதினி, விவேகசிந்தாமணி, மாதர்மனோரஞ்சனி முதலான வர்த்தனிகளும் தமிழகத்துக்கு அழகு செய்கின்றன. சுதேசமித்திரன் பத்திராசிரியரான ஜீ. சுப்பிரமணிய ஐயர் அவர்களின் பேருதவியை நோக்குங்கால் தமிழகத்தார் அவருக்கு எவ்விதம் கைம்மாறு செய்வார்களென்று தோற்றவில்லை. கிராமங் கிராமமாய் நுழைந்து அஞ்ஞான விருளையோட்டி ஞானதீபம் கொளுத்துவதில் சுதேச மித்திரனுக்கு இணையில்லை. இப்பத்திரிகை நீடுழி காலம் வாழ்வதாகுக!

இவ்விதம் தமிழ்மொழி செழித்துவந்தாலும் அதன் வளர்ச்சி நாகரீக வளர்ச்சியின் அளவிற்குத் தகுந்தபடியான வளர்ச்சி அல்லவென்று எனக்குத் தோற்றுகின்றது. கைத்தொழிலிற்குப் பயன்படும் ஞானமும் விவசாய ஞானமும் வியாபாரத் துறைகளின் ஞானமும் ஆகியபொருள் வருவாய்க்கு இன்றியமையாத சாஸ்திரப்பொருள் ஞானத்தைத் தமிழர்களுக்குப் புகட்டிவைக்கும்படியான நூல்கள் இன்னமும் ஏற்படவில்லை. நாடகமும், கதையும், கவியும், இலக்கணமும், ஒரு நாட்டிற்கு இன்றியமையாதனவாயினும், காலத்தைப் பொருளாகக் கருதவேண்டி இருக்கிற ஏழை ஜனங்களுக்கு வசன நடைகளே அத்தியாவசியம். அது இன்னமும் அதிகப்படவில்லை. ஆயிரக்கணக்கான வசன நூல்கள் வெளிவரவேண்டும். அவையெல்லாம் மனிதர்களின் சீக ஜீவனத்திற்கு இன்றியமையாதனவாகிய சாஸ்திரவாராய்ச்சிகளையும் பௌதிகவாராய்ச்சிகளையும் தம்முள் ஏராளமாய் அடக்கிக்கொண்டு படிப்பவர்களுக்கு இனிமை பயக்கவேண்டும். நான் கேள்வியுறுகிறது யாழ்ப்பாணத்து நல்லூர் ஒருவர் செய்த பௌதிகசாஸ்திரமும் ஈரோட்டில் வக்கீல் ஒருவர் செய்த தேக சாஸ்திரமுமே ஒழிய வேறொன்றில்லை இவ்வளவு அருகிய சாஸ்திர நூல்கள் மாத்திரம் உலாவுகின்ற தமிழகத்தில் தமிழ் வளர்ச்சி குறைவென்று தான் சொல்லவேண்டி இருக்கிறது. ஆதலின் ஆங்கில மறிந்த யாவரும் தமது தமிழ்ப்பாஷையில் சாஸ்திரப்பொருள்கள் நிறைந்த நூல்களைப்பெருக்கிக்கொள்ள வேண்டுமென்பது கடமையாகின்றது.

இவ்விதம் புதிய சாஸ்திரப்பொருள்களைத் தமிழில் மொழி பெயர்த்துக்கொள்ளும்போது, புதுவார்த்தைகளையும் புதுச் சொற்றொடர்களையும் செய்துகொள்ளவேண்டி இருக்கிறது. அவ்விதம் செய்துகொள்பவர் சாக்கிரதையுடன் செய்துகொள்ளவேண்டும். இப்படிச் செய்யவிரும்புவோர்களோ என்றால் சில சமயங்களில் தமிழ்ப்பாஷையின் நீக்குப்போக்குத் தெரியாதவர்களாக இருக்கிறார்கள். ஆதலால் அதனிடத்தில் மரியாதையும் அவர்களுக்கு இல்லாமற்போகிறது. சில பத்திரிகைகளிலும் வர்த்தனிகளிலும் வெளியாகும் வியாசங்கள் மிகவும் சகிக்க முடியாத கொடுந்தமிழில் ஆக்கப்பட்டிருக்கின்றன. விஷயங்கள் மிகவும் சிறந்தன வாயினும், அவ்விஷயங்களை இனிய எளிய தமிழ் நடையில் ஆக்கிவைக்க வேண்டும். இல்லாவிடில் பாஷை கௌரவம் கொள்ளமாட்டாது. தமது வசன நடையில் தமிழ்ப் பாஷைக்குரித்தான வசன லெக்ஷணங்களையும் சொல்லோசைகளையும் சொற்றொடர் அமைதிகளையும் முற்றிலும் கவனியாமலும், ரகர றகர நகர ணகர பேதங்களையும், ஒற்று இரட்டுமிடங்களையும் இரட்டாவிடங்களையும் கவனியாமலும் எழுதுபவர் பலருண்டு. இவர்களெழுதும் பாஷைக்கும் செம்மையான செந்தமிழிற்கும் மலைக்குமடுவிற்கும் போலிருக்கின்றது. தமிழ்வசன நடையை எழுத ஆரம்பிக்கின்றவர்கள் தமிழின் போக்கை அறிந்தவர்களாகவே இருக்கவேண்டும். இன்னார் எழுதலாம் இன்னார் எழுதலாகாது என்ற ஒரு விவஸ்தை ஏற்படாமலிருப்பதினாலே மோசம் நிரம்ப உண்டாகின்றது. அவரவர் தமது மனதிற்குத் தோற்றியவாறெல்லாம் தமிழை உபயோகப்படுத்துகிறார்கள். என்னைப்போன்ற எளியவர் கையில் தமிழ் மாட்டிக் கொண்டு தவிக்கின்றது. இதற்கு ஒரு விமோஜனம் சீக்கிரத்தில் ஏற்படவேண்டும்.

இது விஷயத்தில் தமிழ்ப்புலவர்களால் ஆகவேண்டிய காரியம் ஒன்றுளது. அது என்னவென்றால், நமது தமிழ்ப்புலவர்கள் இந்த அவஸ்தையைக்கவனிக்காமல் ஒரு மூலையில் ஒதுங்கி நின்று பழய காலங்களையே நினைந்து நினைந்து ஒன்றுஞ்செய்யேம் என்கிறார்கள். அவர்கள் வசன நடையே எழுதுவதில்லை.

எழுதினாலும் கடபுடத்தமிழ் எழுதுகிறார்கள். பண்டைக்காலங்களில் வழங்கிவந்த அருகிய பதங்களையும், திரிசொற்களையும், இலக்கியத்திற்கே உரித்தான அளபெடைகளையும், வேற்றுமையுருபுகளை விரித்துக்காட்டாமல் தொகுத்துப்புணர்ந்த சொற்றொடர்களையும், பொருள் மயக்கமுண்டாகும்படி தம்முடைய யுக்திசாமர்த்தியம் புலப்படத்தொகுத்த வசனத்தையும், எப்போதும் விதியின்படியே சந்தி சேர்த்துப்புணர்த்திய சொற்றொடர்களையும் 'குறியீட்டிலக்கணம்' ஆகிய முழுப்புள்ளி, முக்கால் புள்ளி, அரைப்புள்ளி முதலியன இல்லாமலும் ஒரேசரியாய் இயைந்த வசனத்தையும் எழுதிவிடுகிறார்கள். நமது புலவர்கள் இக்குறைகளையெல்லாம் விலக்கி இனிய எளிய தமிழ் நடைகளை எழுதுவார்களானால், நம்முடைய நாட்டிற்கு மிகவும் நன்மையுண்டாகும்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே"

என்றார் இலக்கணநூலார். பழையன தானே கழியட்டுமென்றும் புதியன தானே புகட்டுமென்றும் காலதாமதம் செய்வதா என்று நினைத்த வைத்தியநாத தேசிகர்,

"பழையன கழித்தலும் புதியன புகுத்தலும்
வழுவல கால வகையினானே,"

என்றார். ஆதலின், நமது நாகரீகத்தை நாம் வளர்த்துக்கொள்ளுந்தோறும் நமது பாஷையின் பழைய நிலையையும் தோற்றத்தையும் தொன்மையையும் சிறப்பியல்பையும் மனத்தில் நினைத்து இவைகளிற்கியையத் தமிழை விருத்திசெய்துகொண்டு சுகவாழ்வடைவோமாக!

பத்திராசிரியர்.

தன் சரித முணர்த்து மொழி.

அதாவது விசாரிக்கும் எவர்க்கும் தன் வரலாற்றை வெளியிடும் மொழியென்றுபொருள். இத்தகைமொழி எவ்வெப்பாஷைகளிலும் உண்டு; எனவே, நமது தமிழ்ப்பாஷையிலும் உண்டு என்

னப்புகல்வது மிகை. இவ்விதத் தமிழ்மொழிகளின் ஒன்றை இன்றெடுத்துப்பேசுவோம். எல்லாமெடுத்துப்பேச இன்று இடங்கிட்டாது. என்னல் இயலவும் இயலாது. எடுத்துக்கொண்ட மொழியாதெனில் "நேய்" என்பதேயாம். இது ஒரு சிறுமொழி. இதன் பெருமை மிகப்பெரிது. கடுகுசிறியது காரம் பெரியதுஎன்பதின் உண்மையை இது இனிது விளக்கும். இச்சிறுமொழியானது ஓர் செந்தமிழ்மொழி. இது உணவுப்பொருள்களின்முக்கியப்பொருள் என்பது யாவரும் அறிந்ததே. "நேய்யில்லாவுண்டிபாழ்" என்னும் ஆன்றோர் வாக்கும் இதற்குச்சான்றாகும். இதர ஜாதியாரைப்போலத் தமிழரும் ஆதியில் மாடுகளையே தங்களுக்குரிய ஆஸ்தியாகக்கொண்டிருந்தவர் (Nomadic Tribe) என்பதை இது நன்கு விளக்கும். "மாடு பொன்பச்கம் செல்வம்" என்னும் நிகண்டும் இதைத் துணிவுறுத்தும்.

அந்தணர் ஆவினைந்து (பஞ்சகவ்வியம்), அரசர்நிரைகவர்ச்சி, நிரைமீட்சி, எனையோர் பசுக்காவல் ஆகிய பிரயோகங்களும் இதை வெளியிட்டு நிற்கும். பசுக்காவல் உணவின் பொருட்டேயன்றி உழவின் பொருட்டாகாதோவெனின் அதுவும் உணவின் பொருட்டேயாம். மேற்கூறிய ஆன்றோர் வாக்கினல் அறியக்கூடியது பின்னும் ஒன்றுண்டு. நெய் பிறபொருளுடன் சேர்த்துண்ணப்பெறுவது. அவற்றுள் நெய் முதற்பொருள்; நெய்யோடு கூடாத பிறபொருள் பயனிலதாகும் என்பதே.

நெய் சேராவிடில் மெய்சோரும் என்பது "பாலும் நெய்யும் மெய்க்குறுதி" யென்னும் பழமொழியால் விளங்கும்.

நெய்யோடுசேர்ந்த பிறபொருளாவன சோறுகறி முதலிய உணவுப்பொருள். இவ்வுணவுக்காகும் பொருள்களைக்கூலம் என்பது பண்டையோர் வழக்கு:—கூலம் முதல் துணை யென இருவகைத்து.

1 நெல்லுப்புல்லு வரகுதினை சாமை
இறுங்குதோரை இரகியோடெட்டும் முதற்கூலம்.

2. எள்ளுக்கொள்ளுப் பயறுழுந்தவரை
கடலைதுவரை மொச்சையோடெட்டும் துணைக்கூலம்.

இவ்விருவகைக் கூலத்திற்கும் இட்டு வழங்கும் பெயர் தமிழ் மொழிகள். ஆகவே இவை தமிழர் உணவுப்பொருளாய் இருந்தன. முதல் முதலில் நெய்யே உணவுப்பொருளாயிருந்திருக்கவேண்டும். பிற்காலங்களில் அது வேண்டிய அளவுகிடையாமையால் பிறபொருளும் சேர்ந்திருக்கவேண்டும் இப்பிறபொருள் சேர்ந்த காலமே தமிழர் நிரைகாவலோடு உயிர்காக்கும் உழவுத்தொழிலையும் மேற்பூண்ட காலமாகும்

ஏருழுது ஏருவிட்டுக் களைபிடுங்கி நீர் பாய்ச்சிப்
பயிர் காத்து உயிர்காக்கும் உழவர்பெருமை

யாவரும் அறிந்ததே.

முதற்கூலம் முன்னுண்டாயது தணைக்கூலம் பின்னுண்டாயது என்று சொல்லாது தெரியலாம். முதற்கூலத்திலும் முன்னிற்கும் நெல்லே முன்னுண்டாயது என்பதும் நிறுத்தன் முறையால் அறியலாம். அதாவது முதல் முதல் "நெய்", அடுத்து "நெல்", அதையடுத்துப் "புல்", இப்படிப்பிரசைகள் விர்த்தியாக விர்த்தியாகக்கூலப்பொருளும் அதிகரித்தன. இவ்விருவகையும் கூடிய ஈரெட்டுக் கூலத்தோடு கருங்கறியும் (மிளகு) கழைநெல்லும் சேர்ப்பப் பதினெட்டாயது. "பதினெண்கூலமும் உழவர்க்கு மிகுக" என்னும் வாழ்த்தால் விளங்கும். இப்பால் எத்தனையோ சேர்ந்துள்ளன. இப்பதினெட்டிலும் எள்ளொன்றே தைலவித்து என்பதும் கவனிக்கத்தக்கது.

நெய் பற்றுமல் நெல்லும், நெல்லுப் பற்றுமல் புல்லும் பிறவும்போந்தனவென்று மேலே சொன்னோம். நெய்க்குப் பின்வந்த கூலவகைகளைச்சுவையுறச்செய்ய நெய்யே வேண்டியதாயிற்று. ஆகவே வேறு நெய் கண்டு பிடிக்கலாயிற்று. "போதாமை புதுமைக்குத்தாய்". ஒன்று அவசியம் வேண்டியதாயின் அது எவ்விதத்திலும் வெளிப்படுத்தப்பெறுமாதலின் எள்ளினின்றும் நெய் எடுக்கத் தலைப்படலாயிற்று. நாளடைவில் இதுவும் பற்றுமல் பிறநெய்யும் பெறலாயிற்று. பிறவென்றவை:—

ஆமணக்கு நெய், தேங்காய் நெய், இலுப்பை நெய், புன்கின் நெய், புன்னை நெய், சணல் நெய், மணிபிலான் நெய், மண்நெய், (கிரிசினையில்) முதலியன.

இவற்றுள் கடையில் சொல்லிய விரண்டும் பிறந்த நாள் நம்மிற் பலர் அறிந்த நாள். ஆதலின் அவற்றின் பிறப்பை எளிதில் அறிந்தோம். அவற்றின் முன்னுள்ள மூன்றும் அருகியுள்ளதும் அருகிப்பயன்படுவது மாதலின் அவற்றின் பிறப்பை அறியமுயலவேண்டாம். அவற்றின் முன்னுள்ள மூன்றின் பிறப்பே ஆய்ந்தறியப்பாலது.

எண்ணெயாவது எள்ளின்நெய்; பசுவின்நெய்க்கு அடுத்துக்கண்டுபிடிக்கப்பெற்றது இதுவே என எளிதில் விளங்கும். கூலப்பொருளில் நெய்தரும் வித்து எள்ளொன்றே யிருத்தலினென்க. நெய்யினின்றும் பகுத்துரை எண்ணெய் எனப்பெயர் பெற்றதாம். இதரநெய்களைப்பெயர் குறிக்கும்போது கற்றோரும் மற்றோரும் வழுவென்றும் பாராது விளக்கெண்ணெய், தேங்காயெண்ணெய், இலுப்பெண்ணெய் என்று இன்றும் சொல்லிவருகிறார்கள். இவையே "எள் நெய்" முன்வந்ததென விளக்கும்.

இது நிற்க. முதலில் உணவுக்காகி வந்த நெய்யே பின்னாட்களில் விளக்குக்குமாகி வந்தது என்பது. "விளக்குநெய் தீர்விடத்துச் சென்றிருள் பாய்ந்தாங்கு" என்பதால் என்க. அன்றியும் மாவிளக்கேற்றுவது இன்றைக்கும் நெய்யைக்கொண்டேயாம். மாவிளக்கினைக்கொண்டு மற்றவிளக்கும் கோயில்களுக்கேயன்றி மற்றவிடங்களுக்கு அல்ல எனலாம். அரசருக்கு மணியும், அல்லாத மற்றையோருக்கு மதியும் விளக்காயிருந்தனவாகும். இற்றைக்கும் சந்தரனை ஏழைவிளக்குஎன்பார்கள். நாகரிகம் அதிகப் படவே ஏனைய இடங்களிலும்விளக்கிடலாயிற்று. நெய்க்கு உணவு விஷயத்தில் உதவியாக எள் நெய் வந்ததுபோல், விளக்குவிஷயத்தில் ஆமணக்கு நெய்வந்ததெனலாம். அதற்கு விளக்கெண்ணெய் என்று வழங்கும்பேரே இதற்கு அத்தாட்சியாகும். பின்னும் சில நாளில் இவ்விருவுதவியும் பற்றாமல் தேங்காய் நெய் உணவுக்கும் இலுப்பை நெய் விளக்குக்கும் உதவியாய்ப் போந்தன. இவ்வுதவிக்குதவி போந்தகாலந்தான் எண்ணெய்க்கு நல்லெண்ணெய் எனப் பேர் வந்தகாலமாக்கும். உணவுக்காகும் இரண்டு உதவி நெய்யுள் உபத்திரவப் படுத்தாது எண்ணெய் எனக்

ஈஸாப் நீதிகதைகள்.

2. ஓநாயும் ஆட்டுக்குட்டியும்.

1. கோடை தெற்றுமோர் நாளொரு குன்றிடை
யாடை தெற்றிய தன்ன வருவிக்க
ணீடு தெற்றிய வேட்கை நிரப்புமா
லாடு மொற்றை யடுந்திற னாயொற்றை.

2. நீரி னோட்டத்தின் மேனில நின்றுநீ
ராரு கின்றவக் கோணா யடிநிலஞ்
சாரு நீருணுஞ் சாதுவைச் சண்டைக்கே
நேரு வானொரு மாற்ற நிகழ்த்துமால்.

3. குற்றம் வாயினுஞ் கூறு தொருவனைப்
பற்றிக் கொல்வதென் றான்மனம் பற்றுமோ
வெற்று நின்செயல் பேதா யினியநீர்
சற்று மஞ்சலை தாக்கிக் கலக்குதி.

4. என்ற மாற்ற மிருசெவி யேறலும்
பொன்றி னாலென வஞ்சிப் புகலுமா
னின்றன் வாய்ப்பட்டு நீகழித் திட்டநீ
ரென்றன் வாய்ப்படு மேழை யருந்துவேன்.

5. கீழ்நி லத்துறு நீர்கிளர்ந் தேறிப்போய்
மேனி லத்துறு மென்பது மேன்மையோ
நானி லத்திது நன்றல வென்றலுந்
தானி னைத்துப் பிறிதொன்று சாற்றுமால்.

6. அதுகி டக்கவொ ராறு மதிக்குமுன்
மதியி முந்தெனை வைதனை யாமெனப்
புதிய குற்றமி தென்கொல் புவிக்கண்யான்
மதிய மாறின்னும் வந்தில வந்தென.

7. குற்ற மேகுடி கொண்டவக் கோணாய்தன்
சொற்ற சொற்கள் பயனில தோன்றலான்
முற்று மேசின மூண்டு முறுமுறுத்
தெற்று தற்கு வருகின்ற தென்சொலி.

8. நின்னைப் பற்றிய தன்றேனின் றந்தையாந்
தன்னைப் பெற்றவத் தந்தை யிகழ்ந்தது
பின்னைப் பெற்றவப் பிள்ளைக் குரித்தன்றோ
வென்னப் பற்றி யடித்திரை செய்ததே.

ஆகக்கவி - 12

3. தவளைகள் தமக்கு ஓர் அரசனை விரும்பியது.

1. பூம லிந்திடு பொய்கைத் தடமெலாந்
தாம லிந்து சரிக்குந் தவளைக
ளேம லிந்தன வென்றுமொன் றுவன
பேம லிந்தன தம்முட் பிணங்கின.

[எம் (எமம்)-இன்பம். பேம்-அச்சம்.]

2. அறிவி லாமை யடைந்தோ ரரசனைப்
பெறுகு மாறருட் டெய்வத்தைப் பேணலு
முறுதி காண்கில வென்றவ ருண்மைகைத்
தெறிகின் றுரொரு கட்டையை யேரிக்கண்.

3. இதுகா ணுங்கட் கிறையென வீழ்த்தலு
மதுவி ழுந்த வொலியி னவைவெரீஇப்
புதிய மன்னெனப் போற்றி யொழுகின
மதியி லாதமண் டூகங்க ளென்பவே.

4. நாட்செ லச்செல நாடி நெருங்கின
சேட்செ லாதகைத் தீண்டியுங் கண்டன
மீட்சி யின்றதன் மேலுங் குதித்தன
வாட்சி செய்தன தாம்விரும் பாறெலாம்.

5. இத்த கைச்செய லற்ற விறைவனை
வைத்த தெய்வத்தை வாழ்த்தி வருக்குமாற்
பொய்த்த விவ்விறை போலா தெமையெலா
முய்க்கு மோரிறை யுய்க்கென வேண்டலும்.

6. அன்ன தேனுங் கருத்தறிந் தேனென
மன்ன வன்னென நாரையை வைத்தனன்
சொன்ன நாரையச் சூழலிற் றன்னடி
யென்னு மோசையு மில்லா திறுத்ததே.

7. இறுத்த வேந்த னிருப்பு மெழுச்சியுஞ்
சிறுத்த வையமுஞ் செய்கில வாயினுங்
குறுத்த முன்காற் றவளைக் குலம்பல
மறித்த வாயின வாய்க்கிரை கொள்கையால்.

8. கொடிய நாரையின் கோலாற் குடியெலா
மடியு மாறுகண் டோடி வருக்குமா
னெடிய தெய்வத மேயினி நீயெமைப்
படியி லெந்தம் பழநிலை வைத்தியால்.

9. என்றி ரக்குந் தவளேகட் கென்சொலு
மொன்றி வாழ்கலிர் கேட்டிற் குடம்பட்டீர்
நன்றி கொன்றிர் நடலேகொண் டீரினி
நின்ற கேட்டிற் குரியிர்நீ ரென்றதே.

ஆகக்கவி—21.

(இன்னும் வரும்)

வையை R. சுப்பிரமணியஐயர்.

தமிழகச்செய்தி.

தஞ்சைத்தமிழ்ச்சங்கம்.

சென்ற அக்டோபர்மீ 16உ விஜயதசமி அன்று எங்கள் சங்கத்தின் ஆறும் வருஷமஹோற்சவம் சிறப்பாக நடந்தேறியது. அப்போது அனேகம் தமிழபிமானிகள் வந்திருந்தார்கள். தஞ்சை எஸ். பீ. ஜீ காலேஜ் தமிழ்ப்பண்டிதராகிய வையை. R. சுப்பிரமணி ஐயர் அவர்கள் அக்கிராஸனம் வகித்தார்கள். அப்போது படிக்கப்பட்ட சென்ற வருஷத்து அறிக்கைப்பத்திரம் ஏற்கனவே சென்ற மாசத்துச் சஞ்சிகையில் வெளியிடப்பட்டது இந்த சஞ்சிகையில் முதலில் அமைக்கப்பட்டனவாகிய "தமிழ்மொழியின் வளர்ச்சி," "நன் சரிதமுணர்த்து மொழி" என்னும் இரண்டு வியாசங்களும் அப்போது படிக்கப்பட்டவைகளே. இவை அன்றி, அக்காலத்தில் பண்டிதர் C. S. முத்துஸாமி ஐயர் அவர்கள் கம்பராமாயணத்தில் சீதாபிராட்டியார் ஸ்ரீ இராமன் கணையாழியைக்கண்டு களித்த விஷயமாக ஓர் பிரசங்கஞ்செய்தார். அக்கிராஸனாதிபர் அவர்கள் தமிழின் பரிதாபநிலையைக்காட்டி அதனை வளர்க்கும்படி சபையிற் கூடியிருந்த அனைவரையும் வேண்டிக்கொண்டனர்.

திருவாரூர்த்தமிழ்மாணவர் சங்கம்.

சென்ற நவம்பர்மீ 1உ சுக்கிரவாரதினம் மாலையில் போர்டு ஹைஸ்கூலில் ஷை சங்கத்தின் வருஷ மஹோற்சவம் இனிது நடந்தேறியது. மதுரைத்தமிழ்ச்சங்கத்தலைவராகிய ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைசாமித்தேவர் அவர்கள் அக்கிராஸனம் வகித்து வீற்றிருந்தார்கள். இச்சபையின் தலைவராகிய பண்டிதர் சந்தானமையங்கார் அவர்கள் இச்சபைக்கு மிகவும் பாடுபடுகிறதாகத்தெரிகிறது.

பத்திராசிரியர்.

324 1-324

புத்தகப்பிரபஞ்சம்.

பரிமளா:— இஃது ஓர் அழகியகதை. வங்காளிபாஷையில் முதல்முதல் ஸ்ரீபங்கிம் சந்திரசட்டர்ஜி என்னும் கிரந்தகர்த்தாவினால் செய்யப்பட்டது. இதனை இப்போது தமிழிற்செய்தவர் திருச்சிராப்பள்ளி பிரஜானுகூலன் பத்திரிகையின் ஸப் எடிடராகிய ஸ்ரீ T. V. கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரியாரவர்கள். இந்தத் தமிழ்மொழிபெயர்ப்பு ஏற்கனவே வேறொருவராற் செய்யப்பட்ட கன்னடமொழிபெயர்ப்பிற் கிணங்கியது.

இக்கதையின் சுருக்கம் பின் வருமாறு: இராமகுமாரபாபு என்றவருக்கு ஓர் அருமைப்புதல்வி விமலா என்பவள். தனது மைத்துனனாகிய தேவீதாஸனுக்கு அவளை விவாகஞ்செய்விப்பது என்று தீர்மானஞ்செய்திருந்தான். அப்படியிருக்கையில் கல்யாணத்திற்கு முந்தியநாள் எப்படியோ எவர்களாலோ விமலா தனது அறைக்குள்ளேயே கொல்லப்பட்டுப் பிரேதயம் போனவிடம் தெரியாமற்போய்விடுகிறது. அப்போது இராமகுமாரன் வியாகூலமடைந்து திப்பிரமைகொண்டு தேவீதாஸனிடத்தும் தனது வீட்டிலேயே வசித்துக்கொண்டிருந்த தனது சகோதரியின் பெண்ணும் தனது மருமகளுமாகிய பரிமளா விடத்தும் சந்தேகங்கொண்டு தேவீதாஸனை அவனது வீடுநோக்கி வெறட்டி அடித்து உடனே டிடெக்டிவ்சூப்ரிண்டெண்ட் அவர்களுக்குத் தந்தி அனுப்பி சஞ்சீவசந்திரபாபு என்னும் கைதேர்ந்த துப்பறியும் சேவகனை வரவழைத்து அவனிடத்தில் கதையையெல்லாம் சொல்லிக் கொலை செய்தவர்களைக்கண்டுபிடிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறான். 'அதோ போகிறது மிருகம்' என்று காட்டி வேட்டை நாயை அவிழ்த்துவிட்டால், உடனே வேட்டைநாய் மோப்பங்கொண்டு ஓடுவதுபோல, சஞ்சீவபாவு காலாடிகளைக் கண்டும் இரத்தக்கறையை நோக்கியும் திருடர்களைப்பிடிக்கவாரம்பிக்கிறான். இந்தக்கதைமுழுவதும் சஞ்சீவ பாபுவின் ஸாகஸமே. ஆங்கில நாட்டில் ஷர்லாக் ஹோம்ஸ் என்று ஒரு துப்பறியும் யூகன் இருந்தானென்று கோனன்டாயில் என்ற கிரந்தகர்த்தா கூறுகிறார். அதைப்போலவே இந்தியன் ஷர்லாக் ஹோம்ஸ் நமது சஞ்சீவபாபு என்று சொல்லிவிடலாம். மிகைபடக்கூறியென்ன? சஞ்சீவ பாபுவின் ஸாகஸத்தால் வெளியாவது என்னவென்றால்:—விமலா கொல்லப்படவில்லையென்றும், அவ்விதம் தோற்றுவித்தலால் லாபமடையக்கூடிய சிலர் அப்படிச்செய்வித்தார்கள் என்றும், தேவீதாஸனுடைய பெரியப்பன் பிள்ளையாகிய மஹீந்திரநாதனும் சிற்றப்பனாகிய மஹேந்திரநாதனும் பரிமளாவுடன் இரட்டைச்சகோதரியாகப்பிறந்த நிர்மலாவின் உதவியால் விமலையைத்தூக்கிக்கொண்டுபோய் ஓர் வனத்தின் மத்தியில் வைத்தார்களென்றும் தெரியவருகிறது. இக்கதையின் மத்தியில் வரும் உபகதைகள் பல. அவைகளைப்படிக்க ஆனந்தம் பெருகும்.

பத்திராசிரியர்.